Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 139/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 06, Page.No.16/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.தினேஷ்குமார் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மாது | தொழில் | கேட்ரிங் வேலை |
| கிராமம் | பாச்சல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 24 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 10th day of August 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**அ.சா.6 திரு. தினேஷ்குமார் முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கேட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மூத்த சகோதரர் ஆவார். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இன்று ஆஜராகி இருந்தால் அவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலும். கடந்த 16.12.2022 அன்று மாலை 03.00 மணியளவில் மாக்கனுர் கூட்டுரோட்டில் உள்ள மீன் கடையில் நானும் என் அண்ணனும் மீன் சாப்பிட சென்றோம். அப்போது இவ்வழக்கு எதிரிகள் இருவரும் காலி பீர்பாட்டிலை எங்கள் மீது வீசி பிரச்சனை செய்தார்கள். ஏன் பீர் பாட்டிலை மேலே வீசினீர்கள் என்று கேட்டதற்கு 2ம் எதிரி ராஜேஷ் எங்களை பார்த்து தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி அங்கிருந்த பீர் பாட்டிலை எடுத்து என் அண்ணனின் தலையில் அடித்தார். பின்னர் 1, 2 எதிரிகள் கற்கலை எடுத்து ஒருவர் என் அண்ணன் தலையிலும் மற்றொருவர் என் அண்ணனின் முதுகிலும் தாக்கினார்கள். 1ம் எதிரி என் அண்ணனை கொலை செய்துவிடுவதாக

மிரட்டினார். பின்பு சண்டையை பத்தி என் சித்தப்பா மற்றும் தந்தையிடம் கூறினேன். பின்பு நானும் என் தந்தையும் காயம்பட்ட என் அண்ணனை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தோம். என் அண்ணன் சிகிச்சையில் இருந்த போது உங்களை கொலை செய்துவிடுவோம் என்று இருவரும் வெளியூர் ஆட்களை அழைத்து வந்து மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரிதத்தனர்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு எதிரிகள் எங்கள் பகுதியை சேர்ந்தவர் என்றாலும் அவர்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். என் அண்ணனுக்கும் எதிரிகளுக்கும் முன்விரேதம் உள்ளது என்றால் இல்லை. ஆனால் நாங்கள் எங்கள் பகுதியில் வரும் போதும், செல்லும் போது எல்லாம், எதிரிகள் எங்களை முறைக்கிறார்கள். அவ்வாறு எதிரிகள் எங்களை முரைப்பதால் எங்களுக்கும் அவர்களுக்கும் முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்தேன். சம்பவ இடத்தில் இருந்து 2 கி.மீ தொலைவில் டாஸ்மார்க் கடை உள்ளது. நான் கூறும் மீன் கடை டாஸ்மார் கடை அருகே உள்ளதா என்றால் இல்லை. மாக்கனுர் கூட்டுரோட்டில் உள்ளது. டாஸ்மார் கடை மாக்கனுர் கூட்டு ரோட்டில் இருந்து 1 கி.மீ தொலைவில் இருக்கும். என் வீட்டிற்கும் மீன் கடைக்கும் 4 கி.மீ தொலைவு இருக்கும். அந்த கடை மீன் வறுக்கும் கடை என்றால் சரிதான். என் வீட்டில் இருந்து மாக்கனுர் கூட்டு ரோடு வரும் வழியில் வேறு மீன் கடைகள் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அவை சிறிய கடைகள் ஆகும். என் அண்ணன் பள்ளியில் படிக்கும் போது தலைமை ஆசிரியர் பாபு என்பவரை கத்தியால் குத்தியதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. என் மீது தான் வழக்கு உள்ளது. என் அண்ணனுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரிதான். என் அண்ணனுக்கு போதை பழக்கும் உள்ளதா என்றால் இல்லை. என் அண்ணன் மீது ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நாங்கள் எதிரிகளை தாக்கியதால் அவர்கள் காயம்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. பீர்பாட்டிலால் தாக்கிய போது பீர்பாட்டில் உடைந்து விட்டது என்றால் சரிதான். போலீசாரிடம் நான் ஏதோனும் எடுது்து

கொடுத்தேனா என்றால் கல் மட்டும் எடுத்து கொடுத்தேன். இரவு 7.30 மணியளவில் மாக்கனூர் கூட்டு ரோட்டிற்கு அழைத்து சென்ற போது அங்கு வைத்து எடுத்து கொடுத்தேன். கற்கல் தவிர வேறு ஏதும் நான் எடுத்து கொடுக்க வில்லை என்றால் சரிதான். பாதிக்கபட்ட நபர் என் அண்ணன் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 1**
**திருப்பத்தூர்**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC .NO. 139/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.5, Page.No.16/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சக்திகணேசன் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. ஆறுமுகம் | தொழில் | மருத்துவர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |
| எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை | | | 1, 2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 10 th day of August 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அ.சா.5 திரு சக்திகணேசன் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமயையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.12.2022 அன்று மாலை 04.50 மணியளவில் இதே மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது உதயக்குமார் 22 வயது ஆண் நபரை அவரது அம்மா விஜயா என்பவர் அவருடைய காயத்திற்கு சிகிச்கைக்கா அழைத்து வந்திருந்தார். அவரை விசாரித்தபோது, அதே தினத்தில் தெரிந்த 7 ஆண்கள் கண்ணாடி பால்டில்கள் கொண்டு ஒட்டடப்பட்டி கிராமத்தில் வைத்து மாலை 03.30 மணிக்கு தாக்கியதற்கு சிகிச்சைக்காக வந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, கீழ் கண்டகாயங்ள் காணப்பட்டன

01. வலது புற நெற்றியில் வெட்டுக்காயம் – 3x 0.5 x 0.5 செ.மீ அளவு
02. தலையின் முன்பகுதியில் – 2 x 0.5 x 0.5 செ.மீ அளவு வெட்டுக்காயம்

 அவரை பரிசோதனை செய்தததில்  இரண்டு காயங்களும் கொடுங்காயம் என சான்றளித்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபருக்கு நெற்றி மற்றும் தலையை தவிர வேறு எங்கும் காயங்கள் இல்லை என்றால் சரிதான்.  குடிபோதையில் வாகனத்தை வேகமாக இயக்கி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH
Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 1**
**திருப்பத்தூர்**